நிதி மற்றும் திட்டமிடல்
அமைச்சு

# இலங்கைச் சுங்கம்

தயாரிப்பு

**சட்டத்தரணி ஜீ.ஏ.லெஸ்லி காமினி**
சுங்கப் பிரதிப் பணிப்பாளர்

**சட்டத்தரணி எம்.ஆர்.ராஜ்மோகன்**
சுங்க அத்தியட்சகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சுங்கம்

## சிறு கையேடு

இலங்கைச் சுங்க நடைமுறைகளைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு இக்கையேடு விசேடமாக வடிவமைக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டது.

தயாரிப்பு :

**ஜீ.ஏ.லெஸ்லி காமினி**
உயர் நீதிமன்ற சட்டத்தரணி
சுங்கப் பிரதிப் பணிப்பாளர்

**எம்.ஆர்.ராஜ்மோகன்**
உயர் நீதிமன்ற சட்டத்தரணி
சுங்க அத்தியட்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைச் சுங்கம் - சிறு கையேடு**

பதிப்புரிமை

© ஜீ.ஏ.லெஸ்லி காமினி

எம்.ஆர்.ராஜ்மோகன்

**முதற் பதிப்பு : மாசி 2007**

அச்சிட்டோர் :

எஸ் அன்ட் எஸ் பிரின்டர்ஸ்
49, ஜயந்த வீரசேகர மாவத்தை,
கொழும்பு 10.

**இலங்கைத் திருநாட்டில் கௌரவமான நிரந்தர சமாதானத்துடன்கூடிய புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்கவேண்டி தீர்க்கமானதும் உறுதியானதுமான சிந்தனையுடன் செயற் படும் மாண்புமிகு ஜனாதிபதி கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்கள் உத்தியோக பூர்வமாகப் பொறுப் பேற்ற முதலாம் ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கண்காட்சியின் போது சுங்கத் திணைக்களத்தின் பங்களிப்புடன் இக் கையேடு பிரசுரிக்கப்பட்டு விநியோகிக் கப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இக் கையேடானது "பாரம்பரியமாக வரி அறவிடுதல்" என்ற விடயத்தை ஒட்டி நாட்டின் சகல சமுகத்தையும் சேர்ந்த மக்களின் சமூக மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டது.

உள்நாட்டில் நிலவும் பரஸ்பர ஒத்திசைவுத் தன்மையை முக்கியமாகக் கருத்தில் கொண்ட அதேவேளை புதிய தொழில்நுட்பம் மற்றும் சர்வதேச தேவைகள் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றுக்கு இசைவாக இக்கையேடு தொகுக்கப்பட்டுள்ளது.

சட்ட பூர்வமானதும் சமூகத் தேவைகளை உணர்ந்து கொள்ளக்கூடியதுமாக தகவல்கள் தொகுக்கப்பட்டிருப்பதோடு வாசகர்களின் அறிவை விருத்திசெய்து கொள்ளும் வகையிலும் "சுங்கத்தின் அடிப்படை நோக்கங்களை" நிறைவேற்றிக் கொள்ளும் முறையிலும் இக் கையேடு தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

கொள்கைத் திட்டமிடல் மற்றும்
ஆராய்ச்சிப் பிரிவு
இலங்கைச் சுங்கம்
கொழும்பு 01.

தொலைபேசி : 011 - 2342501
தொலை நகல் : 011 - 2446361
மின்னஞ்சல் : slcus - ppr @ hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கம்

சுங்கம் என்பது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் அமைகின்ற காரணத்தால் எமது நோக்கமானது வரிச் சேகரிப்பு மூலமும் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர் சமூகம் ஆகியவற்றிற்கு வசதிகளை வழங்குவதன் மூலமும், என்றும் நிலைபெற்றிருக்கக்கூடிய வகையில் எமது பொருளாதாரத்தை மேலும் வலிமை பெற்றதாய் ஆக்கும் குறிக்கோளுடன் அமைந்துள்ளது.

மேற்கண்ட சேவைகளைப் பற்றிக் கேள்வி எழுப்பப்படும்போது நாம் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதன்மூலம் எமது கலாசார விழுமியங்களையும் சமய சமூக மற்றும் சூழலையும் பாதுகாக்கும் அதேவேளை சட்டபூர்வமான அரசியல் சட்டத்தையும் உறுதிப்படுத்தும் கட்டுப் பாட்டுடன் நடுநிலையாகச் செயல்படுவதுபற்றி பெருமை கொள்கிறோம்.

**எஸ்.ஏ.சி.எஸ்.டபிள்யு. ஜயதிலக,**
**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
இலங்கைச் சுங்கம்,
கொழும்பு - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. அறிமுகம்
2 சுங்க வரலாற்றின் மைல் கற்கள்
3 சுங்கத்தின் தொலை நோக்கு
4. சுங்கத்தின் நோக்கம்
5. சுங்கத்தின் குறிக்கோள்கள்
6. சுங்கத்தின் கடமைகள்
7. சுங்க தலைமையகம்
8. உலக சுங்க ஸ்தாபனம்
9. சர்வதேச சுங்க தினம்
10. சுங்க கட்டமைப்பு
11. சுங்கத்தின் அதிகார அமைப்பு
12. சுங்க அலுவலகங்கள்
13. சுங்கக் கட்டளைச் சட்டம்
14. இதர சட்டங்கள்
15. சுங்கத்தினால் சேகரிக்கப்படும் தீர்வைகள்
16. கணக்கீட்டுச் சு த்திரம்
17. சுங்க வருமானம்
18. ஏற்றுமதி வருமானம்
19. உள்வரும் பயணிகளுக்கான சலுகைகள்
20. தங்கம் கொள்முதல் செய்வதற்கான எல்லை
21. உடன் கொணராத பயணிகளின் பொதி
22. தபால்மூலம் பெற்ற வெகுமதிகள்
23. இதர வெகுமதிகள்
24. வெளிச் செல்லும் பயணிகளுக்கான சலுகைகள்
25. தபால் மூலம் வெகுமதிகளது ஏற்றுமதி
26. இதர பொருட்களின் ஏற்றுமதி
27. வியாபாரப் பொருட்களினது இறக்குமதி / ஏற்றுமதி
28 இறக்குமதியாளர்களுக்கான சலுகைகள்
29. தடைசெய்யப்பட்ட , மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்
30. சுங்க குற்றங்கள்
31. சுங்க அதிகாரங்கள்
32. சுங்க தண்டனைகள்
33. சுங்கத்தினால் கைப்பற்றப்பட்ட ஹீரோயின் போதைப் பொருட்கள்
34. பறிமுதலும் தண்டப்பணமும்
35. இறக்குமதி செய்யப்படத்தக்க வாகனங்களின் வயது எல்லை
36. வாகன இறக்குமதிக்கான பத்திரங்கள்
37. வாகனங்களினது பெறுமதி
38. வெகுமதியாக வாகனமொன்றை அனுப்புவது எப்படி
39. சுங்க ஏலம்
40. சுங்கத்தின் சமூகக் கடப்பாடு
41. சுங்கத்திலிருந்து தகவல்களைப் பெறுதல்
சுங்கத்திற்கு தகவல் தெரிவித்தல்
சுங்கத்திடமிருந்து வெகுமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகம்

ஆரம்பத்தில் சுங்கவரி சேகரிப்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட சுங்கமானது தற்காலத்தில் வருமானத்தைப் பாதுகாத்தல், வியாபார இலகுவாக்கல், சட்ட அமுலாக்கல், சமூக மேம்பாடு போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு பலவித கடமைகளைத் தன் தலைமேல் ஏற்றுச் செயற்படும் சுங்கத் திணைக்களமானது பல பிரிவுகளாகப் பிரிந்து தனது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இவ் அரசாங்க நிறுவனம் நிதியமைச்சின் கீழே சுங்கப்பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஈழத் திருநாட்டில் சகல பகுதிகளின் நிர்வாகத்தையும் தன்னகத்தே கொண்டு அமைகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட சட்டங்களை தனது ஆயுதமாகக்கொண்டு சுங்கக் கட்டளைச்சட்டம் எனும் அடிப்படைச் சட்டத்தின் பிரகாரம் இது செயற்படுகிறது. சுங்கக் கட்டளைச் சட்டமானது 1869 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டபின் 49 முறை மாற்றம் பெற்றுள்ளது. பொது மக்கள் மட்டுமின்றி சுற்றுச் சூழலையும் தாவர விலங்கினங்களையும் பாதுகாப்பது சுங்கத்தின் இன்றைய கடமையாகும். ஆகவே சமூகத்தைப் பாதுகாத்து குற்றம் செய்வோரை சட்டத்தின்மூலம் நிறுத்தித் தண்டிப்பது சுங்கத்திற்கு முக்கிய கடனாகவுள்ளது. அதே நேரம் முழுச் சமூகமும் சுங்கத்திற்கு அதன் குறிக்கோள்களை அடைய தமது முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டிய அதே நேரத்தில் சுங்கத்திலிருந்து அருமையான வெகுமதிகளையும் பெறும் சந்தர்ப்பத்தையும் பெறுகிறது.

உறு பொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்
தெறு பொருளும் வேந்தன் பொருள்

(தமிழ் மறை திருக்குறள்
அதிகாரம் 76 பொருள் செயல் வகை குறள் 756)

உறு பொருளும் - உடையாரின்மையின் தானே வந்துற்ற பொருளும் ;உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும் ; தன் ஒன்னார்த் தெறு பொருளும் - தன் பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும் ; வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள் - சுங்கம் - கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது.

(பரிமேலழகர் உரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சுங்க வரலாற்றின் மைல்கற்கள்

கி.பி

| | |
|---|---|
| 113-134 | முதலாம் கஜபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் சுங்கத் தீர்வை பற்றிய குறிப்பேடுகள் |
| 879 - 899 | மன்னார் கச்சேரி தூண் கல் வெட்டுகளில் சுங்க அதிகாரிகளைப் பற்றிய குறிப்புகள் |
| 1055-1110 | முதலாம் விஜயபாகு மன்னனின் காலத்தில் அரசாங்க வரி வசூலிப்பு பற்றிய குறிப்புகள் |
| 1200 | பொலனறுவைக் கால கட்டத்தில் விதிக்கப்பட்ட வரிகள் |
| 1413 | திசர சந்தேசவில் குறிப்பிடப்பட்ட "சுங்க வரி" |
| 1608 | போத்துக்கீசரின் காலத்தில் அரச வருமானக் கட்டுப்பாட்டாளர் அறிமுகம் |
| 1796 | கொழும்பு சுங்க தலைவரால் மணியகாரர் என்ற பதவி உருவாக்கப்பட்டமை |
| 1803 | பொருட்களைப் பொறுத்து சுங்க வரியை கவர்னர் நோத் அறிமுகப்படுத்தியமை |
| 1809 | சுங்கத் திணைக்களம் ஆரம்பம் |
| 1809 | அந்தோனி பெற்ரோலச்சி முதலாவது சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகமாக கிழக்கிந்திய வியாபார கம்பனியின் பணியாளர் சபையின் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்பட்டமை. |
| 1837 | சுங்க நடைமுறைகளுக்கென ஒழுங்கு முறைகளுடன் முதலாவது கட்டளைச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. |
| 1869 | சகல கட்டளைச் சட்டங்களும் இணைக்கப்பட்ட சுங்கக் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது |
| 1913 | பிறசல்ஸ் இறுப்புப் பெயர் பட்டியல் முறை அறிமுகம் |
| 1933 | சலுகைத் தீர்வை முறை அறிமுகம் |
| 1968 | இணைந்த சுங்க சேவை ஏற்படுத்தப்படல் |
| 1988 | பிரதான சுங்க சேகரிப்பாளர் என்ற பதவி சுங்கப்பணிப்பாளர் நாயகமாக மாற்றம் |
| 2002 | சுங்க சேவையிலிருந்த ஒருவர் பணிப்பாளர் நாயகமாக நியமனம் |
| 2005 | புதிய சுங்க தலைமையகத்திற்கான அடிக்கல் நாட்டல் |
| 2006 | சுங்கத்தில் எக்ஸ் - கதிரியிக்க பரிசோதனை இயந்திரங்கள் அறிமுகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சுங்க தொலைநோக்கு

ஆசியாவின் சிறந்த சுங்க நிறுவனங்களில் ஒன்றாக மிளிர்தல்

## 4. சுங்கத்தின் நோக்கம்

தேசிய செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவிருக்கும் நோக்குடன் வியாபாரம் பிரயாணம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றிற்கு அனுசரணை செய்யும் அதேவேளை சுங்க சட்டத்தையும் வருமானம் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான இதர சட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.

## 5. சுங்க குறிக்கோள்கள்

- வருமான சேகரிப்பு
- வியாபார அனுசரணை
- சட்டத்தை அமுலாக்கல்
- சமூகப் பாதுகாப்பு

## 6. சுங்கத்தின் கடமைகள்

- வியாபார மற்றும் இறுப்பு சம்பந்தமான அரசாங்கக் கொள்கைகளைச் செயல்முறைப்படுத்தல்

- இறக்குமதி ஏற்றுமதி வரிகளை மதிப்பிடலும் சேகரித்தலும்

- ஏனைய அரச தாபனங்களின் சார்பாக தீர்வைகளையும் வரிகளையும் மதிப்பிடலும் சேகரித்தலும்.

- வரி விலக்குகளையும் வரிச் சலுகைகளையும் வழங்குதல்

- வரிகளையும் இதர தீர்வைகளையும் உத்தரவாதப்படுத்தல்

- மீளளிப்பு , தீர்வைக்குறைப்பு மற்றும் தள்ளுபடி

- கள்ளக் கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்

- தடை செய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பண்டங்கள் தொடர்பிலான சட்டங்களை அமுல்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் தொடர்புடைய இதர சட்டங்களின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களைப் புலன் விசாரணை செய்வதும் விசாரிப்பதும்.

• குற்றவாளிகளைத் தண்டிப்பதும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை கைப்பற்றுதலும்

• பறிமுதல் செய்த பண்டங்களை விற்றுத் தீர்த்தல்

• இறக்குமதி ஏற்றுமதிச் சரக்குகளை அகற்றுவதற்கு உதவுதல்

• பயணிகளையும் அவர்களின் பொதிகளையும் வெளியே எடுத்துச் செல்ல உதவுதல்.

• சரக்கு மற்றும் பயணிகள் அகற்றல் செயல்முறைகளைக் கணனிமயப்படுத்தல்

• உள்நாட்டு கைத்தொழில் மற்றும் விவசாயப் பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் பொது வரி சம்பந்தமான நடைமுறைகளைச் செய்றபடுத்தல்

• ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களின் முகாமைத்துவம்

• பொருட்களைக் குதப்படுத்தலின் முகாமைத்துவம் (பிணைத்திட்டம்)

• ஏற்றுமதி வாய்ப்புள்ள கைத்தொழில் திட்டங்களைக் கண்காணித்தல்

• வியாபாரப் புள்ளிவிபரங்களைத் தொகுத்தலும் வழங்குதலும்

• வகைப்படுத்தல் விதிகளின் தீர்வு பற்றிய தகவல்களை வழங்குதல்

• பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்

• பெயர் அட்டவணை, பகுப்பாய்வு, மதிப்பிடுதல் மற்றும் அமுலாக்கல் செயல் முறைகள் தொடர்பான விடயங்கள்பற்றி உலக சுங்க ஸ்தாபனத்துடன் கிரமமான தொடர்பினைப் பேணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **சுங்கத் தலைமையகம்**

இலங்கை சுங்கத் திணைக்களம்
சுங்க இல்லம்,
த.பெ.இல. 518,
பிறிஸ்டல் வீதி, கொழும்பு 01.

8. **உலக சுங்க ஸ்தாபனம்**

சுங்க கூட்டுறவு ஆலோசனைச் சபை என உத்தியோக பூர்வமாக அழைக்கப்படும் உலக சுங்க நிறுவனமானது (புதிய பெயர்) தனது செயற்பாடுகளை பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் நகரில் 1952 நவம்பர் மாதம் நான்காம் திகதி ஆரம்பித்தது. இதன் முதலாவது அமர்வு 1953 ஜனவரி 26 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ் ஆலோசனைச் சபையின் செயற்பாடுகளுக்கு ஒரு பொதுச் செயலகம் துணையாகச் செயற்பட்டது. இதன்கீழ் சர்வதேச ஒப்பந்தத்தின் பிரகாரம் விலைமதிப்பு , இடைக்கால பெயர் அட்டவணை மற்றும் நிரந்தர தொழில்நுட்பக் குழுக்களென மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. அரசாங்கங்களுக்கிடையான நிறுவனங்களில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்தபடியாக 170 நாடுகள் கொண்ட மிகப் பெரிய அங்கத்தவர்களைக் கொண்ட நிறுவனமாக இன்று பரிணமித்திருப்ப தையிட்டு உலக சுங்க ஸ்தாபனம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு

**30, hue de Marche,**
**B 1210**
**Brussels,**
**Belgium ,**

இணைய முகவரி **www.wcoomd.org**

9. **சர்வதேச சுங்க தினம்**
ஜனவரி 26 ஆம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சுங்கக் கட்டமைப்பு

நிர்வாகப் பிரிவு

நிதிப்பிரிவு

கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப்பிரிவு

மனிதவள அபிவிருத்திப் பிரிவு

தன்னியக்கத் தரவு முறைப்படுத்தல் பிரிவு

இறக்குமதி மற்றும் இறுப்பு பட்டியல் பிரிவு

ஏற்றுமதி மற்றும் கப்பல் மாற்றி ஏற்றும் பிரிவு

பயணிகள் பொதிப் பிரிவு

பிணைப் பிரிவு

விலை மதிப்புப் பிரிவு

விமான நிலையப் பிரிவு

விமான சரக்குப் பிரிவு

மத்திய சரக்குக் கண்காணிப்புப் பிரிவு

தடுப்புப் பிரிவு

வருமானச் செயலணி

மத்திய புலன் விசாரணைப் பணிப்பகம்

மத்திய புலனாய்வுப் பிரிவு

சட்ட அலுவல்கள் பிரிவு

உள்நாட்டு உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள் ) பிரிவு

11. சுங்க அதிகார அமைப்பு

சுங்கப் பணிப்பாளர் நாயகம்

சுங்க பிரதிப் பணிப்பாளர் நாயகம்

சுங்கப் பணிப்பாளர்

சுங்க பிரதிப்பணிப்பாளர்

சுங்க உதவிப்பணிப்பாளர்

சுங்க அத்தியட்சகர்

சுங்க உதவி அத்தியட்சகர்

சுங்க பரிசோதகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சுங்க அலுவலகங்கள்




13. சுங்க கட்டளைச் சட்டம்

(இலங்கை சட்டவாக்கத் தொகுதியின் 235 ஆம் அத்தியாயம்)

| | |
|---|---|
| பிரிவு 1 | அறிமுகம் |
| பிரிவு 2-9 இ | முகாமைத்துவம் |
| பிரிவு 10-22 | அதீர்வை அறவிடல் |
| பிரிவு 23-26 | துறைமுக வரிகள் |
| பிரிவு 27-52அ | உள்வரும் ஒழுங்கு விதிகள் |
| பிரிவு 53-54 | மீள் இறக்குமதிக்கான தீர்வைப் பத்திரம் |
| பிரிவு 55 | உள்நாட்டு வண்டி அல்லது கடல் மூலப்பொருள் அகற்றல் |
| பிரிவு 56-64 | வெளிச் செல்லும் ஒழுங்கு விதிகள் |
| பிரிவு 65 | 15 தொன் நிறை அளவுக்குக் குறைந்த கப்பல் மூல வியாபாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 66-67 கரையோர ஒழுங்கு விதிகள்

பிரிவு 68 250 தொன் எடைக்குக் குறைந்த கப்பல்களின் இயக்கம் பற்றிய ஒழுங்கு விதிகள்.

பிரிவு 69-100அ பொருட்களைக் குதப்படுத்தல்

பிரிவு 100-124 பொது ஒழுங்கு விதிகள்

பிரிவு 125-166ஆ கள்ளக்கடத்தல் , கைப்பற்றல் மற்றும் வழக்குத் தொடுத்தல் பற்றி பொதுவான

பிரிவு 167 இக் கட்டளைச் சட்டத்தில் பயன்படுத்திய கலைச் சொற்களின் விளக்கம்.

அட்டவணை

அ - சுங்க தீர்வைப்பட்டியல்

ஆ - தடை செய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்டவைகளது அட்டவணை

இ - துறைமுக வரிகள்

ஈ - அனுமதிப் பத்திரம்

உ - இறக்குமதிப் பொருட்களுக்கான மதிப்பீட்டு முறைகள்

ஊ - கள்ளக்கடத்தல் குற்றங்களுக்கான தண்டப்பணம்

எ - சுங்க இல்ல முகவர்களுக்கான அனுமதிப் பத்திரத்திற்கான விதிகளும் நிபந்தனைகளும்.

14. சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக சுங்கத் திணைக்களம் செயற்படுத்தும் / நிருவகிக்கும் சட்டங்கள்

தீங்கு செய்யக்கூடிய ஆயுதங்களின் சட்டம்

ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டம்

பந்தய சட்டம்

உள்நாட்டு உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

புலமைச் சொத்துரிமை சட்டம்

விவசாய விளை பொருட்கள் சட்டம்

உணவுக் கட்டுப்பாட்டு சட்டம்

அணுசக்தி அதிகாரசபைச் சட்டம்

மீன்பிடிச் சட்டம்

சங்கு மீன்பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து மீன்பிடி
தேயிலைக் கட்டுப்பாடு
இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்
தெங்கு அபிவிருத்திச் சட்டம்
காடுகள்
செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
இறக்குமதிகள்,ஏற்றுமதிகள் (கட்டுப்பாடுகள்) சட்டம்
அரசிறை பாதுகாப்புச் சட்டம்
தேசிய சுவடிகள் சட்டம்
தொல் பொருட் கட்டளைச் சட்டம்
தொலை தொடர்புக் கட்டளைச் சட்டம்
உணவு கட்டளைச் சட்டம்
அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டம்
அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்துகள் சட்டம்
நஞ்சு, அபின் மற்றும் அபாயகரமான மருந்துகள் சட்டம்
தனிப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புக் கட்டளைச் சட்டம்
தாவர, விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்
சுடு படைக்கலங்கள் கட்டளைச் சட்டம்
வெடி மருந்துகள் சட்டம்

15. சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் தீர்வைகள்

சுங்கத் தீர்வை
மிகைக் கட்டணம்
பெறுமதி சேர்க்கப்பட்ட வரி
உள்நாட்டு உற்பத்தி வரி
செஸ் வரி
ஏற்றுமதி அபிவிருத்தி வரி
துறைமுக , விமான நிலைய அபிவிருத்தி வரி
சமூகக் கட்டுப்பாட்டு வரி
பிராந்திய கட்டமைப்பு அபிவிருத்தி வரி
முத்திரைக் கட்டணம்
மோட்டார் வாகன சலுகை வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. கணக்கீட்டு சூத்திரங்கள்

**சுங்க இறக்குமதித் தீர்வை**

பெறுமதி (விலை+காப்புறுதி+கப்பற் கட்டணம்)x தீர்வை வீதம் அல்லது தொகை x தீர்வை வீதம்

**மிகைக் கட்டணம்**

தீர்வை x மிகைக்கட்டண வீதம்

**செஸ் வரி**

(பெறுமதி + பெறுமதியின் 10% ) x செஸ் வீதம் அல்லது தொகை x செஸ்வரி வீதம் அல்லது

தீர்வையின் 10% (தீர்வை வீதம் 45% க்கு அதிகமாயுள்ளபோது)

**துறைமுக மற்றும் விமான அபிவிருத்திவரி**

பெறுமதி x து.வி.அ.வீதம்

**பெறுமதி சேர் வரி**

(பெறுமதி பெறுமதியின் 10%+ தீர்வை+ மிகைக்கட்டணம்+ செஸ் வீதம் +து.வி.அ.வரி+ உ.உ.வரி)x பெ.சே.வரி வீதம்

**உள்நாட்டு உற்பத்தி வரி**

(பெறுமதி+ பெறுமதியில்10%+தீர்வை+ மிகைக்கட்டணம் + செஸ் வீதம + து.வி.அ வரி +பெ.செ.வரி) x உ.உ.வரி வீதம்

**பிராந்திய கட்டமைப்பு அபிவிருத்தி வரி**

(பெறுமதி +தீர்வை+ மிகைக்கட்டணம் + செஸ் வீதம +து.விஅ வரி +பெ.சே.வரி + உ.உ.வரி) x பி.க.அ. வரி வீதம்

**சமூக கட்டுப்பாட்டு வரி**

(தீர்வை+ மிகைக்கட்டண + உ.உ.வரி ) x ச.க.வரி வீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சுங்க வருமானம் (மில்லியன் ரூபாக்களில்)

| விபரம் | 2005 | 2006 |
|---|---|---|
| தீர்வையும் மேலதிக கட்டணமும் | 45,660 | 52,513 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 78,180 | 90,085 |
| ஏற்றுமதி | 21 | 24 |
| துறைமுக மற்றும் விமான நிலைய வரி | 11,188 | 19,230 |
| செஸ் வரி | 4,444 | 5,865 |
| சமூக கட்டுப்பாட்டு வரி | 204 | 1,141 |
| பிராந்திய கட்டமைப்பு அபிவிருத்தி வரி | - | 137 |
| மோட்டார் வாகன சலுகை வரி | - | 3 |
| உடு புடவை விற்பனை | 24 | 33 |
| செஸ் வரி நிதியம் | 2,046 | 3,152 |
| உள்நாட்டு உற்பத்தி வரி | 65,385 | 67,193 |
| சிகரெட்டுகள் | 26,658 | 30,067 |
| மதுபானம் | 2 | 27 |
| எரி பொருட்கள் | 22,564 | 13,256 |
| மோட்டார் வாகனம் | 13,033 | 20,730 |
| ஏனையவை | 3,127 | 3,113 |
| மொத்தம் | 20,71,152 | 239,376 |




18. ஏற்றுமதி வருவாய்கள் (மில்லியன் ரூபாக்களில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. உள்வரும் பயணிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்

இலங்கைக் கடவுச்சீட்டு அல்லது இரட்டைக் குடியுரிமை பெற்ற பயணியொருவர் இலங்கைக்கு வருகை தரும்போது கீழ்க்கண்ட தீர்வை விலக்கல் சலுகைகளுக்கு உரித்தாவார்.

பெரியவர்கள் ( 18 வயதிற்கு மேற்பட்டோர்)

i. 90 நாட்களுக்குக் குறைவாக வெளிநாட்டில் தங்கியிருந்தால் அ.டொ 125

தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதிக் கொள்வனவுக்கென அ.டொ 187/50

ii. 90 நாட்கள் அல்லது அதற்கு மேலாக தங்கியிருந்தால் அ.டொ 500

தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதிக் கொள்வனவுக்கென அ.டொ 625

iii. 365 நாட்கள் அல்லது அதற்கு மேலாக தங்கியிருந்தால் அ.டொ 1000

தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதிக் கொள்வனவுக்கென அ.டொ 1750

சிறுவர்கள்

iv. 90 நாட்களுக்குக் குறைவாக வெளிநாட்டில் தங்கியிருந்தால் அ.டொ 87/50

தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதிக் கொள்வனவுக்கென அ.டொ 125

v. 90 நாட்கள் அல்லது அதற்கு மேலாக தங்கியிருந்தால் அ.டொ 187/50
தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதிக் கொள்வனவுக்கென அ.டொ 187/50

குடிவகை - தீர்வை விலக்களிக்கப்பட்டது - 2.5 லீட்டர்

வைன் - தீர்வை விலக்களிக்கப்பட்டது - 2.0 லீட்டர்

வாசனைத் திரவியம் - தீர்வை விலக்களிக்கப்பட்டது - 0.25 லீட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணியொருவர் கொண்டுவரும் சகல பொருட்களும் சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அமெரிக்க டொலர் 10,000 இற்கு மேற்பட்ட அல்லது சமமான வெளிநாட்டு நாணயத்தாள்கள் சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அமெரிக்க டொலர் 100 க்கு மேற்பட்ட பெறுமதிக்கான பொருட்களை தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதியில் வாங்க விரும்பும் இலங்கைக் கடவுச் சீட்டு வைத்திருப்போர் சகல வெளிநாட்டுத் தாள்களையும் விசேட சுங்க கரும பீடத்திற்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் பொருட்களுக்கு சுங்க மற்றும் இதர தீர்வைகள் செலுத்தப்படல் வேண்டும்

வியாபார அளவுப் பொருட்கள்

வெகுமதியாகக் கொண்டுவரப்பட்ட பொருட்கள்

பிரயாணிகள் அல்லது அவரது குடும்பத்திற்காக கொண்டுவரப்பட்ட பொருட்கள் தவிர்ந்த ஏனையவை

தடை செய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் நாட்டிற்குள் கொண்டு வரவோ அல்லது வெளியே கொண்டு செல்லவோ அனுமதி மறுக்கப்படும் அதேவளை, அவை பறிமுதல் செய்யப்படுவதோடு பெறுமதியின் மூன்றுமடங்கு தண்டப்பணமும் செலுத்தும்படி பிரயாணிக்கு உத்தரவிடப்படக்கூடும்.

வெளிநாட்டு நாணயங்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யப்பட்டவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. விமான நிலைய தீர்வையற்ற கடைத் தொகுதியில் வாங்கக்கூடிய தங்கத்தின் எல்லை பிரயாணியொருவருக்கு வருடத்திற்கு ஒருமுறை மட்டும் -

6 மாதத்திற்கு குறைவாகத் தங்கியிருந்தால்
- அ.டொலர் 1000

6 மாதம் அல்லது அதற்கு மேலாக தங்கியிருந்தால்
- அ. டொலர் 5000

**21.** உடன் கொண்டு வரப்படாத பயணிகள் பொதிகள்

உடன் கொண்டுவரப்படாத பயணிகள் பொதிகளை விடுவிக்கும் முகமாக சுங்க பிணைப்படுத்தப்பட்ட குத இல்லங்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

டிரைக்கோ - கொழும்பு 13

டிரைக்கோ - குருணாகலை

டிரைக்கோ - காலி

சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கொழும்பு 10

சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கண்டி

ட்றான்ஸ்கோ - வத்தளை

லக்சிறிசேவா - பேலியகொடை

மிட்கோ - பேலியகொடை

இலங்கை துறைமுக அதிகாரசபை குத இல்லம் - பேலியகொடை

பயணிகள் பொதிகள் பற்றி முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம் யாதெனில் பொருட்களை அனுப்புபவரும் பெறுபவரும் ஒரேயாளாக இருத்தல் வேண்டும் என்பதாகும். (அவ்வாறு இல்லாதுவிடின் இன்னொருவருக்கு அனுப்பப்படும் வெகுமதி பொருளாகக் கருதப்பட்டு சுங்கத்தீர்வை மற்றும் இதர வரிகள் செலுத்தப்படவேண்டும்)

பயணிகள் பொதிகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பயணிகள் தீர்வை விலக்கல் சலுகைகள் அடிப்படையில் தீர்வையற்று விடுவிக்கப்படும். அதற்கு மேலதிகமாகப் பொருட்களும் மற்றும் கட்டாயமாகத் தீர்வை அறவிடவேண்டிய பொருட்களும் தீர்வை செலுத்திய பின்பே விடுவிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரயாணி தனது பாவித்த மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டரை தனது சலுகைக்குள் தீர்வையற்று விடுவிக்கலாம். (இது 3 வருடங்களுக்குமேல் பழைய அல்லது 350 க.அளவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தாது)

தடைசெய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் சலுகைக்குள் அடங்காது.

மேலும் இதர மோட்டார் வாகனங்களும் சலுகைக்குள் அடங்காது.

பயணப்பொதிப் பெட்டிக்குள் ஒளித்து வைக்கப்பட்ட மோட்டார் வாகனம்



22. தபால்மூலம் பெறப்பட்ட வெகுமதிகள்

விமான மார்க்கமாக அன்றி கடல் மார்க்கமாக தபால் மூலம் அனுப்பப்பட்ட பயணப் பொதிகள் அல்லது வெகுமதிகள் கொழும்பு 10, டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள மத்திய தபால் பரிவர்த்தனை மற்றும் துரித தபால்சேவை நிலையத்தில் கடல்த்தபால், விமானத்தபால் சிறு பொதி பிரிவுகளில் சுங்க அஞ்சல் மதிப்பிடல் கிளைமூலம் பொருட்களின் உரிமையாளர்களின் முன்னிலையில் பரிசோதிக்கப்பட்டு விடுவிக்கப்படும். வியாபார நோக்கத்திற்கான பொருட்கள் தவிர ஏனையவை ரூபா 10,000 அல்லது அதற்கு குறைவாக இருப்பின் தீர்வை இல்லாது விடுவிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைசெய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இவற்றில் அடங்காது (எவ்வாறெனினும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி செலுத்தப்படல் வேண்டும்) ஒருவருக்கு ஆறுமாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே இச்சலுகை வழங்கப்படும். ரூபா 10,000 க்கு மேற்பட்ட வெகுமதிகள் சுங்கப் பிரகடனப் பத்திரமூலம் தீர்வை செலுத்தியபின் விடுவிக்கப்படும்.

23. இதர வெகுமதிகள்

வெகுமதிகளானது தபால்மூலம் மட்டுமன்றி முன்பே குறிப்பிடப்பட்ட பொதிகள் அலுவலகங்கள் மூலமும் விடுவிக்கப்படலாம். இங்கே சுங்க பிரகடனம் ஒன்றின் மூலமே வெகுமதிகள் விடுவிக்கப்படும். அவ்வாறான வெகுமதிகள் தனியார் முகவரி யொன்றிற்கு அனுப்பப்பட்டிருத்தல் வேணடும். முன்பு சொல்லப்பட்டவாறு வயது மற்றும் இயந்திர எல்லைகளுக்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள்களும் வெகுமதியாக விடுவிக்கப்படும்.

வியாபார முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட வெகுமதிகள் சாதாரண இறக்குமதி நடை முறைகளுக்கு உட்பட்டு விடுவிக்கப்படும். வெகுமதிகளாக இவை கருதப்படமாட்டா

24. வெளிச் செல்லும் பயணிகளுக்கான வசதிகளும் சலுகைகளும்

வெளிச் செல்லும் பயணிகள் பொதிமீது சுங்க வரி அறவிடப்படுவதில்லை. ஆயினும் வியாபார நோக்கமாக தொகைப்பொருட்கள் அனுமதிக்கப்படமாட்டா. அவை ஏற்றுமதி நடைமுறைக்கு உட்படுத்தப்படவேண்டியன. முன்பு ஒரு பயணியால் கொண்டுவரப் பட்டிருந்தாலன்றி அமெரிக்க டொலர் 500க்கு மேற்பட்டதொகை நோட்டுக்களாக அனுமதிக்கப்படமாட்டாது. மேலதிக தொகை பயணிகள் காசோலைகளாக அனுமதிக் கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி முகவர் ஒருவரினால் அல்லது வங்கி யொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அமெரிக்க டொலர் 10,000 அல்லது அதற்குச் சமமான தொகைப் பணத்தை சுங்கத்துக்கு வெளிப்படுத்தல் அவசியமற்றது. அதற்கு மேலதிகமான பணம் கொண்டு செல்லப்படும்போது சுங்கத்திற்கு பிரகடனப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு நாணயத்தாள்கள் கொண்டுவரவோ கொண்டு செல்லவோ தடைசெய்ய ப்பட்டவை ரூபா 5000 க்கு மேற்படாத இலங்கைப் பணத்தை வெளிக்கொண டுசெல்ல அனுமதியுண்டு.

நிரந்தரமாக வெளிநாட்டில் தங்கிவிடவென எடுத்துச்செல்லும் பயணிகளின் நகைகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதிப்பத்திரத்திற்கு உட்பட்டது. சாதாரண பெண் பயணியொருவர் ரூபா.60,000 வரை பெறுமதியான நகைகளைக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ரூபா 60,000 க்கும் ரூபா 150,000 க்கும் இடைப்பட்ட பெறுமதியான நகைகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதிப்பத்திரத்துடன் எடுத்துச் செல்லலாம். உள்நாட்டு உற்பத்திப்பொருட்களை ரூபா 10,000க்கு மேற்படாத வகையிலும் வியாபார நோக்கம் இல்லாத வகையிலும் பிரயாணி ஒருவர் எடுத்துச் செல்லலாம்.

ஆயினும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்படும். அதே வேளை மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் அனுமதிப்பத்திரங்களுடன் எடுத்துச்செல்லப் படலாம்.

25. தபால்மூலம் வெகுமதிகளை ஏற்றுமதி செய்தல்

வியாபார தொகையில் இல்லாத 30 கிலோ வறையான வெகுமதிகளை தபால்மூலம் கொழும்பு 10, டி.ஆர்,விஜயவர்த்தன மாவத்தை மத்தியதபால் பரிவர்த்தனை நிலை யத்தின்மூலம் சுங்கப் பரிசோதனையின் பின்பும் தபால் அதிகாரிகள்மூலம் மதிப்பிடப் படும் முத்திரைக் கட்டணங்களைச் செலுத்திய பின்பும் அனுப்பிவைக்கலாம். துரித தபால் மூலம் அனுப்பப்படவேண்டிய பொருட்களை மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள துரித தபால்சேவை கருமபீடத்தில் ஒப்படைக்கலாம். தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை அனுப்பப்படமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. இதர பொருட்களின் ஏற்றுமதி

100 கிலோ கிராமுக்குக் குறைந்த ரூபா 10,000 பெறுமதிக்கு குறைந்த பொருட்கள் கொழும்பு 03, காலி வீதி, இல.660 இல் அமைந்துள்ள , ஸ்ரீ லங்கன்லிமிடட் நிறுவனமூலம் ஏற்றுமதி செய்யப்படலாம். விமான பொதிக்கட்டணம் செலுத்தியபின் சுங்கப் பரிசோதனைக்கு இவை உட்படுத்தப்படும். ஆயினும் கடவுச்சீட்டுகள் அடையாள அட்டைகள், மரண அத்தாட்சிப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், காணி வீட்டு உறுதிகள் போன்றவையும் இதர தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களும் இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட அனுமதிக்கப்படமாட்டாது. தேவையேற்படின் சுங்கப் பிரகடனம் ஒன்றும் செய்யப்படல் வேண்டும். இதேபோன்று ஜாஎல வில் அமைந்துள்ள டி.எச்.எல் பொதி பரிமாற்ற சேவை மூலமும் சுங்கப் பரிசோதனையின் பின்னர் பொருட்கள் அனுப்பி வைக்கப்படலாம்.

அவசரமாக முக்கியமான மற்றும் பழுதடையக்கூடிய பொருட்களை கட்டுநாயக்கா விமான பொதி இல்லத்தில் அமைந்தள்ள சுங்க அலுவலகத்தினூடாக ஏற்றுமதி செய்யலாம். அவை வியாபார நோக்கங்களுக்கான பொருட்களாயின் சாதாரண ஏற்றுமதி நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படும்.

## 27. வியாபார பொருட்களின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும்

கீழ்க் கண்ட வகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஒன்றிற்கொன்று வித்தியாசமான நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவதை நாம் காணலாம்.

1. இறக்குமதிப் பொருட்கள் நடைமுறை
2. ஏற்றுமதிப் பொருட்கள் நடைமுறை
3. பிணை முறி நடைமுறை
4. முதலீட்டாளர்கள் ஊக்குவிப்பு பிரிவு நடைமுறை
5. விமான பொதி நடைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்பட்ட சுங்க இல்ல முகவர் ஒருவரின் துணையை மேற்கண்ட நடைமுறைகள் மூலம் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு நாடலாம்.

**28. இறக்குமதியாளர்களுக்கு சுங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள்**

- தீர்வை விலக்கல் சலுகைகள்
- தீர்வை தள்ளுபடி முறைகள்
- சுங்க பிணைக் குதங்களின் பராமரிப்பு
- " என்றபோட்" இறக்குமதிகள்
- தற்காலிக ஏற்றுமதி சார்ந்த இறக்குமதிகள் (ரீப்)
- நிபந்தனைக்குட்பட்ட இறக்குமதி அல்லது நிபந்தனை மீதான இறக்குமதி
- தீர்வை விலக்கல்
- தீர்வை விலக்கப்பட்ட பொருட்களின் பட்டியல்
- முதலீட்டு ஊக்குவிப்பு சபை நடைமுறை
- கணனிமயப்படுத்தப்பட்ட இறக்குமதி ஏற்றுமதி முறை
- இறக்குமதிகளின் குதத்தில் பரிசோதனைக் குட்படுத்தப்படும் கொள்கலனிலான பொருட்கள்
- பச்சை / மஞ்சள் நிற வழிமுறைகள்மூலம் பொருட்களை விடுவித்தல்
- அகற்றல் பத்திரமூலம் அவசர பொருட்களின் விடுவிப்பு
- வங்கி / தனிப்பட்ட உத்தரவாதத்தின் மேல் பொருட்கள் விடுவிப்பு
- கானே /டிறிப்ரிக் முறைமூலமான பொருட்களின் இறக்குமதி
- தீர்வையற்ற மீள் - இறக்குமதி சான்றிதழ்
- பாரிய - துறைமுக முறைமை மூலமான பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இறக்குமதி / ஏற்றுமதிக்காக தடை செய்யப்பட்ட பொருட்கள்

- கசிஸ், ஹீரோயின், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் மற்றும் வாள், கத்தி,குண்டுகள் போன்றவையும் சுடு படைக்கலன்கள் போல் தோற்றமளிக்கும் பொருட்களும்
- வெடி பொருட்கள், கதிரியக்க மற்றும் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களும்.
- ஓசோன் படலத்தைப் பாதிக்கக்கூடிய வாயுக்களும் இரசாயனப் பொருடகளும்
- தடை செய்யப்பட்ட தாவர விலங்கினம்
- தரம் குறைந்த பொருட்கள்
- ஆபாச வெளியீடுகள் அல்லது பொருட்கள்
- நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான புத்தகங்களும் வெளியீடுகளும்
- சமயங்கள், சமயக் கொள்கைகள் மற்றும் சமயத்தலைவர்களைப் புண்படுத்தக்கூடிய வெளியீடுகள் புத்தகங்கள்
- வேறு சட்டங்களால் இறக்குமதி தடை செய்யப்பட்ட பொருட்கள்
- வேறு சட்டங்களால் ஏற்றுமதி தடை செய்யப்பட்ட பொருட்கள்

**இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்**

- 3 1/2 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய வாகனங்கள்
- 5 வருடத்திற்கு மேல் பழைய லொறி, வான், பஸ்
- தொடர்பு சாதனங்கள்
- தொலை நகல் இயந்திரங்கள்
- நிற அச்சு இயந்திரங்கள்
- பாவித்த குளிர்சாதனப் பெட்டி
- பாவித்த டயர்கள்
- பாவித்த தளபாடங்கள்
- மோட்டார் வாகனங்களின் துண்டாக்கப்பட்ட பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மருந்துகள்
- வாசனைத் திரவியங்கள்
- போலிப் பொருட்கள்
- தடைசெய்யப்பட்ட தாவர விலங்கினங்கள்
- பாவித்த வாகன இயந்திரங்கள்
- தூரத்தில் இருந்து இயக்கும் விளையாட்டுப் பொருட்கள்
- கையடக்கத் தொலை பேசி
- ஏனைய சட்டங்களால் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்

**ஏற்றுமதி மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்**

- 1945 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மோட்டார் கார்கள்
- தொல் பொருள்
- தாவர விலங்கினங்கள்
- தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை
- செப்புத் துண்டுகள்
- இரும்புத் துண்டுகள்.

## 30. சுங்கக் குற்றங்கள்

- தடை செய்யப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதிப் பொருட்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதிப் பொருட்கள்
- மறைத்து வைக்கப்பட்ட பொருட்கள்
- விலை மதிப்புக் குறைப்பு
- பிரகடனப்படுத்தாதிருத்தல்
- தவறான பிரகடனம்
- கள்ளக்கடத்தல்
- தீர்வை விலக்கல் சலுகையைத் தவறாகப் பயன்படுத்தல்
- போலியாக அல்லது பிழையாகத் தயாரிக்கப்பட்ட பத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. சுங்க அதிகாரங்கள்

- பொருட்களைப் பரிசோதித்தல்
- வீடுகள் / கடைகள் சோதனை
- ஆட்களைச் சோதனை செய்தல்
- தடைகளை ஏற்படுத்தலும் வாகனங்களைச் சோதனையிடலும்
- ஆட்களைச் சோதனையிடலும் பொருட்களைக் கைப்பற்றலும்
- சுங்க குற்றங்களைப் புலன் விசாரணை செய்தல்
- வழக்கொன்றை விசாரணை செய்தல்
- பொருட்களை விடுவித்தல்
- பொருட்களைத் தடுத்து வைத்தல்
- பொருட்களைப் பறிமுதல் செய்தல்
- பறிமுதல் அல்லது தண்டணைப்பணம் விதித்தல்
- பொருட்களை அழித்தல்
- பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைவிடப்பட்ட பொருட்களை விற்றல்.

32. தண்டனைகள்

- சுங்க வசதிகளை நிறுத்திவைத்தல்
- பொருள் பறிமுதல்
- பொருட்கள் பெறுமதியின் மூன்று மடங்கு அபராதம்
- தண்டப்பணம் அறவிடுதல்
- தண்டப்பணம் அல்லது சிறைத் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கடந்த 10 வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஹீரோயின் போதைப் பொருளின் தொகை (கிராமில்)






ஒரு அரைக்கும் இயந்திரத்தில் ஒளித்து வைக்கப்பட்ட 5 கிலோ ஹீரோயின்

34. பறிமுதல்களும் தண்டங்களும்

| | தண்டப்பணம் ரூபா | பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா | விற்றுப் பெற்ற தொகை ரூபா |
|---|---|---|---|
| 1998 | 14512174 | 22906001 | 82244139 |
| 1999 | 14331577 | 81579613 | 194259459 |
| 2000 | 19293246 | 26641786 | 97218114 |
| 2001 | 55198771 | 9594193 | 63710659 |
| 2002 | 80468102 | 8468102 | 84518964 |
| 2003 | 72075235 | 28286988 | 63662802 |
| 2004 | 149951141 | 26901812 | 25990734 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. இறக்குமதி செய்யக்கூடிய மோட்டார் வாகனங்களின் வயது எல்லை

- மோட்டார் கார்
  - 3 1/2 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- மூன்று சக்கர வாகனம்
  - 3 1/2 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்
  - 3 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- 10 இருக்கை வாகனங்கள
  - 3 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- வான், பஸ், லொறி
  - 5 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- அம்புலன்ஸ் போன்ற விசேடவாகனங்கள்
  - 7 வருடம் அல்லது அதற்குக் குறைவாக
- டிராக்டர் வாகனம்
  - 10 வருடம் அல்லது அதற்குக் குறைவாக

## 36. வாகன இறக்குமதிக்கெனத் தேவைப்படும் பத்திரங்கள்

- சுங்கப் பிரகடனப் பத்திரம்
- கப்பல் ஏற்றல் சிட்டையின் பிரதி
- முதலாம் பதிவின் ரத்துச் செய்த சான்றிதழ்
- விலைப்பட்டியல்
- வங்கிக் கடன் பத்திரத்தின் மூலப்பிரதி
- வாகனத்தின் உள்ளூர் முகவரது பெறுமதி அறிக்கை
- ஒப்படைத்தல் கட்டளை
- இறக்குமதி அனுமதிப்பத்திரம் (தேவைப்படின்)
- வாகன முன் பரிசோதனை சான்றிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. **பாவித்த வாகனப் பெறுமதியைக் கணக்கிடும் முறை கீழ்க்கண்ட இரண்டு பெறுமதிகளில் எது அதிகமானதோ அதன் அடிப்படையில் வாகனத்தின் தீர்வைகள் கணக்கிடப்படும்**

(1) விலைப்பட்டியலில் காட்டப்பட்ட பெறுமதி அல்லது

(2) வாகன வகையின் உள்ளூர் முகவர் தரும் பெறுமதியினை நிதி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட வருட தேய்மான அடிப்படையில் குறைத்து அதனுடன் கப்பற் கட்டணம் காப்புறுதி போன்றவற்றையும் சேர்ப்பதுடன் வாகனத்தில் பொருத்தப்பட்ட மேலதிக உதிரிப்பாகங்களுக்கான (ரேடியோ போன்றவை) பெறுமதிகளையும் கூட்டி தீர்வை காணல் பெறுமதி கணக்கிடப்படும்.

வாகனத்திற்கான தீர்வைவீதம், வாகனத்தின் வகை, வயது, இயந்திர கனவளவு, இருக்கைகளின் அளவு அல்லது பயணிகளின் அளவு, மொத்த வாகன எடை வாகனத்தின் உட்புற உயரம் ஆகியவற்றைப் பொறுத்து இறுப்புப் பட்டியல் மூலம் மாறுபடும்.

38. **வெகுமதியாக வாகன இறக்குமதி**

- ✓ குடும்ப அங்கத்தினர் ஒருவருக்காக
- ✓ பெறுநர் 18 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் கூடாது
- ✓ தற்போதைய இறக்குமதிக்கு முன்பு அண்மையில் வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்டிருக்கக் கூடாது
- ✓ குடும்பத்திற்கு ஒரு வாகனம் மட்டும்
- ✓ இறக்குமதிக்கு முன்பு இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ✓ பெறுநரின் பெயரிலேயே பதிவு செய்யப்படல் வேண்டும்
- ✓ ஐந்து வருட முடிவிற்குள் மாற்றப்படல் கூடாது
- ✓ 10 வருடத்திற்கு குறைவான வயதுடைய வாகனமாய் இருத்தல் வேண்டும்
- ✓ 15%வெகுமதி வரி கட்டப்படல் வேண்டும்(சுங்கத் தீர்வைகளுக்கு மேலதிகமாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக விபரங்களுக்கு இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## 39. சுங்க விற்பனை (ஏலம் / கேள்விப் பத்திரம்)

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட பொருட்களை சுங்கத்தின் மத்திய விற்பனைப்பிரிவு ஒவ்வொரு சனிக்கிழமையும் கேள்விப்பத்திரமூலம் விலைகூறி விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்பிரிவு சுங்க தலைமை அலுவலக கட்டிடத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ளது.

இக் கேள்விப்பத்திர விலைகூறல் பற்றிய விபரம் டெய்லி நியூஸ் மற்றும் அதைச் சார்ந்த தமிழ் சிங்கள பத்திரிகைகள் மூலம் 14 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்படும். மத்திய விற்பனைப் பிரிவு ஒரு விற்பனைப் பொருள் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதோடு கேள்விப்பத்திர மொன்றின் மூலம் கேள்விப்பத்திர வைப்புகளை வைத்திருப்போர் தமது விலைகளைக் கோரவும் வசதி செய்யப்பட்டுள்ளது. கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்களை பட்டியலில் குறிப்பிட்ட பிரகாரம் அந்தந்த இடங்களில் சென்று பார்வையிடலாம்.

| **கேள்விப்பத்திர பெறுமதி** | **பத்திரவைப்புத் தொகை** |
|---|---|
| ரூபா 25,500 வரை | ரூபா 50,00 |
| ரூபா 50,000 வரை | ரூபா 10,000 |
| ரூபா 200,000 வரை | ரூபா 25,000 |
| ரூபா 200,000 க்குமேல் | ரூபா 50,000 |

## 40. சுங்கத்தின் சமூகக் கடப்பாடு

- நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கென வருமானத்தை சேகரித்தல்
- சட்டபூர்வமற்ற ஆயுதங்கள் இறக்குமதியை தடுத்தல்
- போதைப் பொருள் கொண்டு செல்வதைத் தடுத்தல்
- ஆபாச பிரசுரங்களைத் தடுத்தல்
- சுகாதாரத்திற்கு கேடு தரக்கூடிய உணவுகளைத் தடுத்தல்
- உணவாக உட்கொள்ள உகந்ததல்லாத உணவுகளை தடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓசோன் படலத்தை பாதிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களை தடுத்தல்
- அனுமதிக்கப்படாத தாவர விலங்கினங்களைத் தடுத்தல்
- தரம் குறைந்த பொருள் இறக்குமதிகளைத் தடுத்தல்
- பொதுப்பாவனைக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய பொருட்களைத் தடுத்தல்
- சமயம் மற்றும் சமயதத்துவங்கள், சமயப் பெரியார்கள் ஆகியோரை இழிவு படுத்தக்கூடிய பிரசுரங்களைத் தடுத்தல்
- விவசாயத்துறையை பாதிக்கக்கூடிய பொருள்கள்,
- பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாசனைத் திரவியங்கள்
- புகையிலை சிகரட்டுகள்
- புலமைச் சொத்து பாதுகாப்பு
- வெடி பொருட்கள் மற்றும் கதிரியக்கப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு
- தொல்பொருட்கள் பாதுகாப்பு

## 41. சுங்கத் தகவல் நிலையம்

சுங்கத் தகவல் நிலையத்திற்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ கீழ்க்கண்ட தகவல்களை ஒருவர் பெற்றுக்கொள்ளமுடியும்.

சுங்க நடைமுறைகள்

இறக்குமதியும் ஏற்றுமதியும்

இருப்புப் பட்டியல் எண்

இறக்குமதி . ஏற்றுமதி அனுமதிப்பத்திர விபரங்கள்

சுங்கத்திலிருந்து வெகுமதி

சுங்கத்திலிருந்து பெறக்கூடிய சலுகைகள்

தீர்வை விலக்கல் சலுகைகள்

இந்நிலையம் சுங்கத் தலைமையகத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ளது

முகவரி : சுங்க தகவல் நிலையம்
இலங்கைச் சுங்கம்
கொழும்பு 01.

இணைய முகவரி : www.customs.gov.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல்களை தெரிவித்தல்

சுங்க குற்றங்கள், வியாபார மோசடிகள், கள்ளக்கடத்தல்கள், கடத்தல் பொருட்களைக் களஞ்சியப்படுத்தியிருத்தல், கடத்தல் பொருட்களை வெளியகற்றல் அல்லது இவை சம்பந்தமான திட்டங்கள் போன்றவை பற்றிய விபரங்களை தபால், மின்னஞ்சல், தொலை நகல் மூலமாக பெயர் குறிப்பிட்டு அல்லது குறிப்பிடாது சுங்கத்துக்குத் தெரியப்படுத்தலாம். இவ்வாறான விபரங்கள் சுங்கத்திற்கு மட்டுமன்றி மனித குலத்திற்கே செய்யும் பேருபகாரமாக அமையும்.
(தகவல் தெரிவிப்போரின் விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும்)

மத்திய புலனாய்வுப் பிரிவு
இலங்கைச் சுங்கம்
கொழும்பு 01
தொலைபேசி : 011-2471471
தொலை நகல் : 011-2472423
மின் அஞ்சல் : slcvat@slt.lk

## வெகுமானம்

சுங்க குற்றமொன்று சம்பந்தமான விபரங்களைத் தெரிவிக்கும் ஒருவருக்கு அக்குற்றம் சரியாக கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பறிமுதல் செய்யப்படும் பொருட்களின் பெறுமதி மற்றும் தண்டப்பணம் ஆகியவற்றில் அண்ணளாவாக 30% க்குச் சமமான ஒரு தொகை வெகுமானமாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org